**புதிய தொலைதொடர்பு கொள்கை (NEW TELECOM POLICY- NTP)**
**என்ற போர்வையில், காங்கிரஸ்- BJP அரசாங்கங்கள்**
**BSNL ஊழியர்களுக்கு இழைத்திட்ட மோசடிகள்**

**முன்னுரை:-**

இன்றைய காங்கிரஸ் UPA-II அரசு, "BSNL நிறுவனம் நஷ்டம் அடைந்து வருகிறது. BSNL ஐ தூக்கி நிறுத்த வேண்டும்" என்றுக் கூறி
1) BSNL உடைமையின் மூன்றில் ஒரு பகுதியை பங்கு சந்தையில் விற்க உத்தேசித்துள்ளது.
2) நஷ்டத்தை காரணம் காட்டி ஒரு லட்சம் ஊழியர்களை VRS என்ற பெயரில் CRS மூலம் வேலை நீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளது.
3) நஷ்டத்திற்கு காரணம் ஊழியர்களுக்கு வழங்கும் உயர் ஊதியம் என்று கூறி BSNL ஊழியர்களுக்கு வழங்கி வந்த போனஸை மறுத்து வருகிறது.

ஆனால் இவை அனைத்திற்கும் உண்மையான காரணம் ஊழியர்கள் அல்ல. மாறாக காங்கிரஸ் மற்றும் BJP அரசுகள் கொண்டு வந்த புதிய தொலை தொடர்பு கொள்கைகள் என்ற பெயரில் செய்த மோசடிகள் தான் காரணம். இதுவரை நான்கு NTPக்கள் வந்துள்ளன. அவைகளைப் பற்றி கீழே காண்போம்.

## OLD NTP- முந்தைய தேசீய தொலை தொடர்பு கொள்கை:-

இது 1947ல் தொடங்கி 1993 முடிய 46 ஆண்டுகள் இருந்து வந்த ஒரே கொள்கை. கிராமம்-நகரம் என்ற பேதம் பாராமல், லாப-நஷ்ட கணக்கு பார்க்காமல், மக்களுக்கு சேவை என்ற ஒரே குறிக்கோள் மட்டுமே. தொழில்நுட்ப வளர்ச்சியை பயன்படுத்தி, படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பையும், மக்களுக்கு சேவையையும் தரும் அரசு துறையாக DOT ஆகவும், பாராளுமன்ற கட்டுப்பாட்டில் இத்துறையை வைத்து நல்ல வருவாயையும், சேவையையும் தரும் திட்டம் தான் OLD NTP.

**1st NTP 1994- புதிய தொலை தொடர்பு கொள்கை- இது OPEN DOOR POLICY ஆகும்.**

இத்திட்டத்தை காங்கிரஸ் தலைமையிலான பிரதமர் நரசிம்ம ராவும், நிதி அமைச்சர் மன்மோகன் சிங்கும் கொண்டு வந்தனர். காங்கிரஸ் அரசு கூறிய காரணம்:
அ) 70 லட்சம் கிராமங்களில் PCO வசதி கூட இல்லை. அதனை வழங்கிடவும்,
ஆ) 1.25 கோடி பேர் WAITING LISTல் உள்ளனர். இதனை குறைத்திடவும்,
இ) இத்திட்டங்களை அமுல் படுத்திட அரசிடம் நிதி இல்லை என்று இத்திட்டத்தை அமுல்படுத்திட இந்திய நாட்டு தனியார்களை இத்துறைக்குள் அனுமதித்தது. அதாவது NTP 1994 என்ற போர்வையில் DOT என்ற சேவைத்துறையில் தனியாரை அனுமதிக்கும் திட்டம் தான் இது. அரசு சொன்ன இலைக்கை தனியார்கள் நிறைவேற்றவில்லை. DOT மட்டும் தான் 50 லட்சம் கிராமங்களுக்கு PCOக்களையும், 1.05 கோடி WAITING LISTல் உள்ளவர்களுக்கு இணைப்புகளையும் வழங்கியது. தனியார் கம்பெனிகள் நகர்புறங்களில் மட்டுமே இணைப்பை கொடுத்து கொள்ளை லாபம் அடித்தனர்.

இத்திட்டத்தின் மூலம் நகர்புறங்களில் வரும் வருவாய் DOTக்கு இழப்பு, தனியார் லாபம் அடைந்தனர். தனியாரகள் கிராமங்களுக்கு அதிகம் செலவு ஆகும் என்று கருதி கிராமங்களுக்கு செல்லவில்லை. DOT தான் கிராமங்களுக்கும் சேவை கொடுத்தது. எனவே இது தொலைதொடர்பு துறைக்கு செய்த முதல் சதியும் மோசடியுமாகும்.

**2nd NTP-1999- சம தளத்தில் போட்டி (LEVEL PLAYING FIELD):-**

இந்தியாவில் உலகமய, தாராளமய, தனியார்மய கொள்கைகள் அமுல் படுத்தியதால் காங்கிரஸ் அரசு தோல்வியடைந்தது. வாஜ்பாய் தலைமையிலான BJP அரசாங்கம் NTP1999 கொண்டு வந்தது. அரசுஅதற்கு கூறிய காரணம்:
அ) உலக அளவில் நவீனம் வளர்ச்சி அடைந்துள்ளது. நமக்கும் வேண்டும் 2G.
ஆ) இத்துறைக்கு அரசிடம் நிதி இல்லை- எனவே அந்நிய நேரடி முதலீடு வேண்டும்- FDI.
இ) இத்துறையில் தனியாரும் உள்ளனர். எனவே வருவாயில் பகிர்வு கொண்டு வரவேண்டும் என இத்திட்டத்தை BJP அரசு கொண்டு வந்தது. இதன் மூலம் உள் நாட்டு முதலாளிகளோடு, வெளி நாட்டு தனியார் கம்பெனிகளுக்கும் தொலை தொடர்பு சேவையை அகல திறந்து விட்டது. இதன் மூலம் DOTயின் சந்தை சுருங்கியது. DOTக்கு அதிக வருவாய் தரும் STD கட்டணத்தை தனியாருக்கு பங்கீடு செய்து தந்தது. இத்திட்டத்தால் DOT சந்தை சுருங்கியது மட்டுமில்லாமல் வருவாயும் இழந்தது. இது இரண்டாவது மோசடியான திட்டம்.

# BJP அரசாங்கத்தால் அரசுத்துறையான DOT, 01.10.2000 முதல் BSNL என்ற பொதுத் துறையாக மாற்றம் செய்தது.

**3rd NTP- 2005- உள் கட்டுமானங்கள் பகிர்வு (INFRASTRUCTURE SHARING POLICY)**

LPG கொள்கை அமுல்படுத்தப்பட்ட பிறகு மத்திய அரசு மாறும் பொழுதும் புதிய டெலிகாம் பாலிஸிகளும் முளைத்துக் கொண்டே வந்தது. இத்திட்டத்தை காங்கிரஸ் அரசு UPA-ஐின் பிரதமர் மன்மோகன் சிங் கொண்டு வந்தார். அவர் சொல்லும் காரணம்: தொலை தொடர்பில் தனியாரும்-பொதுத்துறையும் சேவை வழங்கி வருகின்றன. எனவே இருவரும் சண்டை போடாமல், நீதி மன்றத்திற்கு போகாமல், கட்டமைப்பை பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற திட்டம் தான் NTP-2005. இதனால் குறைவான முதலீடு செய்து குறைந்த கட்டமைப்பு கொண்ட தனியார் முதலாளிகளுக்கு, மக்களின் வரியால், தொல்ழிலாளர் வர்க்கத்தால் கட்டி வளர்ந்து நிமிர்ந்த DOT-BSNL கட்டமைப்பை, அதாவது கட்டிடம், காப்பர் கேபிள்கள், OFC கேபிள்கள், மைக்ரோவேவ் டவர்கள் அனைத்தையும் தனியாருக்கு பங்கிட்டு கொடுக்கும் திட்டம். அதாவது மக்களின் BSNL பொது சொத்தை தனியாருக்கு திருப்பி விடும் நயவஞ்சக மூன்றாவது மோசடி.

## 4th NTP-2011-ஸ்பெக்ட்ர்ம் லைசென்ஸ் விலை மற்றும் வணிக திட்டம் (SPECTRUM SHARING & SPECTRUM TRADING POLICY)

### அ) NTP-2011-என்பது என்ன?

SPECTRUM SHARING & SPECTRUM TRADING POLICY அதாவது ஸ்பெக்ட்ரத்தின் லைசென்ஸ் கட்டண்மும், அதன் மூலம் வணிகமும் ஆகும். 2001ஆம் ஆண்டின் விலைக்கு 2008ஆம் ஆண்டில் நடந்த ஸ்பெக்ட்ரம் டெண்டர் லைசென்ஸ் வழங்குதல்.

### ஆ) ஸ்பெக்ட்ரம் லைசென்ஸ் விலை வியாபரத்தில் ஏர்டெல், ஐடியா, வோடோபோன் ஆகிய மூன்று கம்பெனிகளும் செய்த மோசடி என்ன?

2010ஆம் ஆண்டு 3Gக்கான ஸ்பெக்ட்ரம் ஏலம் விடப்பட்டது. நாடு முழுவதும் 22 மண்டங்களாக பிரிக்கப்பட்டு லைசென்ஸும் வழங்கப்பட்டது. BSNL நிறுவனம் ஏலத்தில் பங்கேற்காத போதும் அதன் விருப்பத்தையும் கேட்காமல் அனைத்து 22 மண்டலங்களுக்குமான அதிக பட்ச உரிமை தொகையான ரூ.16,750 கோடியை அரசு கட்ட வைத்தது. மொத்தமுள்ள 22 மண்டலங்களில்,

ஏர்டெல் நிறுவனம் 13 மண்டலங்களுக்கு மட்டும் லைசென்ஸ் எடுத்து ரூ.12,295 கோடியும், ஐடியா நிறுவனம் 9 மண்டலங்களுக்கு மட்டும் லைசென்ஸ் எடுத்து ரூ.5,254கோடியும், வோடோபோன் நிறுவனம் 11 மண்டலங்களுக்கு மட்டும் லைசென்ஸ் எடுத்து 11,617 கோடியும் லைசென்ஸ் கட்டணங்களாக செலுத்தி, மூன்று நிறுவனங்களும் 20 மண்டலங்களிலும் தங்கள் சேவையை கொண்டு செல்கிறார்கள். இந்த மூன்று நிறுவனங்களும் உள் உடன்படிக்கை (INNER AGREEMENT) செய்து கொண்டும், இவர்கள் தாங்கள் ஏலம் எடுக்கும் பகுதிகளை குறைத்துக் கொண்டும், குறைந்த விலைக்கு ஏலம் எடுத்துள்ளனர்.

வோடோபோன் எந்த பகுதிகளில் லைசென்ஸ் எடுக்கவில்லையோ அந்த பகுதிகளில் ஏர்டெல், ஐடியா கம்பெனிகளின் ஸ்பெக்ட்ரம் மூலமாக சேவைகளை வழங்கும். இதே போல ஏர்டெல் மற்றும் ஐடியா நிறுவனங்களும் சேவைகளை வழங்கும். சுருக்கமாக கூறினால் லைசென்ஸ் இல்லாத பகுதிகளில் வாடிக்கையாளர்களுக்கு ரோமிங் மூலம் தொடர்பு கொடுக்கின்றனர். இதன் மூலம் அரசுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய்கள் நஷ்டமாகும்.

### இ) ரோமிங் என்றால் என்ன?

GSM சேவையில் ரோமிங் என்பது, ஒரு வாடிக்கையாளர் அவரது தொலைபேசி சேவை நடத்தும் நிறுவனத்தின் எல்லைக்கு அப்பால் செல்லும் போது அவருக்கு தொலைபேசி வசதி கிடைப்பது. உதாரணமாக ஏர்டெல் தொலைபேசி பயன்படுத்துபவர் ஐடியா வட்டத்திற்கு சென்றாலும் பேசக்கூடிய வசதிக்கு பெயர் ரோமிங்.

**ஈ) இவ்வாறு விதிகளுக்கு மாறுபட்டு ரோமிங் கொடுப்பதை NTP-2011 கொள்கை எவ்வாறு அனுமதிக்கிறது?**

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கொள்கை SHARING AND TRADINGஆகும். தற்போதைய விதிமுறைகளுக்கு புறம்பாக செயல்படும் தனியார் கம்பெனிகளை காப்பாற்றுவதாகும். 2003ஆம் ஆண்டில் BJP அரசு ரிலையன்ஸ் செய்த மோசடியை சட்டபூர்வமாக்குவதற்கு UAS (UNIFIED ACCESS SERVICE) என்பதை கொண்டு வந்தது போல தற்போது NTP-2011ஐ UPA II மன்மோகன் அரசு கொண்டு வந்துள்ளது.

**உ) WILL சேவையில் CDMA எவ்வாறு பயன்பட்டது?**

இந்தியாவில் 1G என்று சொல்லக்கூடிய முதல் தலைமுறை பயன்படுத்தவில்லை. டிஜிடல் டெக்னாலஜி என்ற இரண்டாம் தலமுறை '2G' நேரடியாக பயன்படுத்தப்பட்டது. இந்திய GSM தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு மாநிலங்களுக்கு இடையே மட்டுமல்லாது வெளி நாடுகளிலும் ரோமிங் வசதி செய்து கொடுத்தது.

பிறகு அடிப்படை சேவைகளை வழங்கினார்கள் (BASIC SERVICE OPERATOR). இவர்கள் முதலில் LOCAL LOOPஐ பயன்படுத்தினார்கள். வயர்லெஸ் சேவை மூலமாக CDMAவை பயன்படுத்தி வீடுகளுக்கு இணைப்பு கொடுத்தனர். இதை ரிலையன்ஸ் நிறுவனம் லைசென்ஸ் விதிகளை மீறி பயன்படுத்தியது. இப்பிரச்சனையை TDSAT என்று சொல்லக்கூடிய டெலிகாம் டிஸ்ப்யூட் அண்ட் செட்டில்மென்ட் நிறுவனம் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். ரிலையன்ஸ் நிறுவனம் செய்தவை சட்ட விரோதமான செயல் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால் 2003ல் ஆட்சியில் இருந்த BJP அரசு, அப்போதைய துறை மந்திரி அருண்சோரி "UAS" என்ற UNIFIED ACCESS SERVICE முறையை கொண்டு வந்தார். அதாவது முறைகேடாக பயன்படுத்தப்பட்ட அண்ட வெளிப்பாதையான ஸ்பெக்ட்ரத்தை முறைப்படுத்த லைசென்ஸ் என்று ரூ.1,658/- கோடியை நிர்ணயித்தார். இத்தொகையானது 2001ஆம் ஆண்டுக்கான தொகை என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. இதைத் தான் 2008ல் அமைச்சர் ஆ.ராசா 2Gக்கான லைசென்ஸ் கட்டண தொகை என நிர்ணயித்தார்.

**ஊ) 3G சேவையில் கம்பெனிகளுக்கு தற்போதுள்ள கட்டுப்பாடுகள் யாவை?**

3G சேவை வழங்க, மொபைல் வாய்ஸ், டேட்டா, வீடியோ, இன்டெர்நெட் சர்வீஸ் வசதிகள் கொண்ட தனி லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. இதன்படி லைசென்ஸ் இல்லாத பகுதிகளில் சேவை வழங்க முடியாது.

## எ) NTP-2011ஆல் ஏற்படும் இரண்டு பாதிப்புகள் யாவை?

1) இந்திய அரசுக்கும், BSNL நிறுவனத்திற்கும் மிகப்பெரிய நிதி இழப்பு ஏற்படும். BSNL மற்றும் MTNL நிறுவனங்கள் அரசு விதிகளின் அடிப்படையில் செயல்பட்டு அனைத்து மண்டலங்களுக்குமான லைசென்ஸ் கட்டனங்களை செலுத்தி உள்ளன.
2) ஏர்டெல், ஐடியா, வோடோபோன் கம்பெனிகள் அரசு விதிகளை மீறி செயல்படுகிறது. அவற்றின் செயல்பாடுகளை சட்ட பூர்வமாக்கினால் இந்த நிறுவனங்களுக்கு மிக அதிகமான லாபமும் கிடைக்கும்.

## ஏ) 3G ஏலம் எவ்வாறு நடத்தப்பட்டது?

இந்த ஏலம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல்-மே ஆகிய மாதங்களில் நடத்தப்பட்டது. இந்த ஏலம் 34 நாட்கள் நீடித்தது. 3G லைசென்ஸுக்கு நாடு முழுவதும் உள்ள ஏரியாவை 22 மண்டலங்களாக பிரிக்கப்பட்டன. 9 நிறுவனங்கள் ஏலத்தில் போட்டி போட்டன. இந்த ஏலம் 183 சுற்றுக்கள் நடந்து ஏலம் விடப்பட்டது. ஏலத்தின் துவக்க தொகை ரூ.3,500 கோடி ரூபாய்கள். இந்த ஏலத்தில் அரசுக்கு கிடைத்த தொகை 67,719 கோடி ரூபாய்கள் ஆகும்.

**3G ஏலம் விடும் முறை**:- ஏரியாக்கள் குறைவாக இருந்து ஏலம் எடுப்பவர்கள் அதிகமாக இருந்தால் ஏலத்தொகையை படிப்படியாக 1 சதம் முதல் 5 சதம் வரை உயர்த்துவார்கள். ஆனால் ஏலம் கேட்பவர்கள் குறைவாக இருந்து சர்வீஸ் ஏரியாக்கள் அதிகமாக இருந்தால் ஏலத்தொகை குறையும்.

## ஐ) ஏர்டெல், ஐடியா, வோடோபோன் ஆகிய மூன்று நிறுவனங்களும் செய்த சதி என்ன? அரசுக்கு எவ்வாறு நஷ்டம் ஏற்பட்டது?

இம்மூன்று நிறுவனங்களும் 22 ஏரியாக்களுக்கும் ஏலம் எடுக்கவில்லை. இதனால் ஏலச்சுற்றுக்கள் குறைந்தன. இவர்களது ஒப்பந்தப்படி ஒரிஸாவை தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் இவர்களில் யாராவது ஒருவர் சேவை கொடுக்க லைசென்ஸ் எடுத்தார்கள். ஆக அரசுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**ஓ) மேலும் இவர்கள் செய்த மோசடிகள் யாவை?**

3G சேவைக்கு தேவைப்படும் கருவிகளான டேபிளட்ஸ், ஐபேட், கைன்ட்லஸ் புக் ரீடர்ஸ். இக்கருவிகள் இருந்தால்தான் 3G சேவை முழுமையாக கொடுக்க முடியும். 3G சேவை தரும் நிறுவனங்கள் இந்த கருவி இல்லாமல் சேவை தர முடியாது. இம்மூன்று நிறுவனங்களும் செய்த சதி, லைசென்ஸ் வாங்காத ஏரியாவில் இந்த மூன்றில் ஒருவரது சேவை மூலமாக வாடிக்கையாளர்களை சேர்ப்பது. இதே போல மேற்கூறிய கருவிகள் தங்களிடம் இல்லாத போதும், இந்த மூன்றில் ஒருவரது கருவியை மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். (லைசென்ஸ் வாங்காமல், கருவிகள் இல்லாமல் நிதி மோசடி செய்தனர்).

**ஓ) இவர்கள் எவ்வாறு உட்கட்டமைப்பு மோசடி மூலம் அரசு, BSNL, MTNL இவர்களை ஏமாற்றுகின்றனர்?**

BSNL நாடு முழுவதிலும் சேவை செய்வதற்கு 16,500 கோடி ரூபாய்களை செலுத்தி உள்ளது. மேலும் கருவிகளுக்காக 2,700 கோடி ரூபாய்களை செலவு செய்துள்ளது. அதிக தொகையை கொடுத்துள்ளது BSNL MTNL நிறுவனங்கள். குறைந்த தொகை கொடுத்த ஏர்டெல், ஐடியா, வோடோபோன் நிறுவனங்களும், வாடிக்கையாளர்களுக்கு அனைத்து பகுதிகளிலும் சேவை தருகின்றன. லாபம் அடந்தது தனியார் நிறுவனங்கள். நஷ்டம் அடைந்த BSNL. இந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு பதிலாக மத்திய அமைச்சர் கபில் சிபல் NTP-2011 ஐ புகுத்தி இவர்கள் செய்த மோசடிகளை சட்ட பூர்வமாக்குகிறார்.

**எதிர்கால கடமை: பொதுத்துறையையும் ஊழியர்களையும் பாதுகாப்பது:-**

இன்றைய காங்கிரஸ் அரசு BRPSE மூலம் 60 பொதுத் துறைகளில் உள்ள 60 லட்சம் ஊழியர்களை VRS மூலமாக வெளியேற்றவும், இந்திய நாட்டு பொதுத்துறைகளின் சொத்துக்களில் மூன்றில் ஒரு பங்கை தனியாருக்கு விற்று விடுவது என முடிவெடுத்துள்ளது. சுருங்க கூறின் பொதுச் சொத்தை தனியார் மயப்படுத்துவது ஆகும். ஆகவே தோழர்களே இதனை முழுமையாக நாம் எதிர்த்திட வேண்டும். பொதுத்துறை ஊழியர்கள், இந்திய நாட்டு தொழிலாளர் வர்க்கம், இடது சாரி கட்சிகளும் இணைந்து ஒரே குரலில் அறைகூவல் விட்டு இருக்கிறது. வரும் 28.02.2012 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் அனைவரும் முழுமையாக பங்கேற்று வெற்றி பெற செய்வோம்.

போராடாமல் பெற்றதில்லை.
போராடி நாம் தோற்றதில்லை.

**ஒன்று படுவோம் போராடுவோம் வெற்றி பெறுவோம்.**

**(இதனை எழுதியவர் ஓய்வு பெற்ற தபால் பகுதி மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர்.S.கணேசன், திருச்சி. தோழருக்கு நன்றி)**